# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

**பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பதவிப்பிரமாண நிகழ்வுகளில் இந்தியாவின் அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தை சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் பங்கேற்பு**

பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி மற்றும் ஏனைய அமைச்சர்களின் பதவிப் பிரமாண நிகழ்வு 2024 ஜூன் 9ஆம் திகதி ராஷ்டிரபதி பவனில் நடைபெற்றது. இப்பதவிப்பிரமாண நிகழ்வில் இந்தியாவின் அயல்நாடுகள் மற்றும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டிருந்தனர்.

2. இலங்கை ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க, மாலைதீவுகள் ஜனாதிபதி அதி மேதகு கலாநிதி முஹம்மது முயிசு, சிசெல்ஸ் துணை ஜனாதிபதி அதி மேதகு அகமத் ஆபிப், பங்களாதேஷ் பிரதமர் அதி மேதகு ஷேய்க் ஹசீனா, மொரிசியஸ் பிரதமர் அதி மேதகு பிரவீந் குமார் ஜக்நாத் மற்றும் அவரது துணைவியார், நேபாள பிரதமர் அதி மேதகு புஷ்ப கமால் தஹல் பிரசண்டா மற்றும் பூட்டான் பிரதமர் அதி மேதகு சேரிங் டொப்கே ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர். அதேவேளை, மாலைதீவு, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் பூட்டான் ஆகிய நாடுகளின் தலைவர்களுடன் அமைச்சர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

3. பதவிப்பிரமாண நிகழ்வினை அடுத்து, இந்நிகழ்விற்காக வருகை தந்திருந்த தலைவர்களை பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் ராஷ்டிரபதி பவனில் சந்தித்திருந்தார். வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில் மூன்றாவது பதவிக்காலத்துக்காக இந்தியப் பிரதமராக பதவியேற்ற அவரை தலைவர்கள் வாழ்த்தியிருந்தனர். இம்முக்கிய தருணத்தில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த தலைவர்களுக்கு நன்றியினைத் தெரிவித்திருந்த பிரதமர், அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கோட்பாடு அகியவற்றுக்கான இந்திய அர்ப்பணிப்பினை மீண்டும் உறுதிப்படுத்தினார். 2047 ஆம் ஆண்டிற்குள் விக்சித் பாரத் இலக்கை இந்தியா எட்டும் அதேவேளையில், தனது மூன்றாவது பதவிக் காலத்தில், நாடுகளுடன் நெருக்கமான பங்குடைமையைப் பேணி பிராந்தியத்தின் அமைதி, முன்னேற்றம் மற்றும் செழிப்புக்காக இந்தியா

தொடர்ந்து பணியாற்றும் என்று பிரதமர் வலியுறுத்தினார். இப்பிராந்தியத்தில் வலுவான மக்கள்-மக்கள் உறவுகள் மற்றும் இணைப்புக்கு அவர் அழைப்பு விடுத்திருந்தார். சர்வதேச அரங்கில் தெற்குலகின் குரலை இந்தியா தொடர்ந்து விரிவுபடுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

4. ஜனாதிபதி ஸ்ரீமதி திரௌபதி அவர்களால் ராஷ்டிரபதி பவனில் நடத்தப்பட்ட விருந்துபசாரத்திலும் இத்தலைவர்கள் கலந்து கொண்டிருந்தனர். இவ்விருத்துபசாரத்திற்காக வருகை தந்த தலைவர்களை வரவேற்றிருந்த ஜனாதிபதி அவர்கள், தேசத்துக்கான சேவையை வழங்குகின்றமைக்காக பிரதமர் மோடி அவர்களுக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்திருந்தார். "இந்தியாவின் ஜனநாயக செயற்பாடுகள் இந்திய மக்களுக்கு மட்டும் உரித்தான பெருமைக்குரிய விடயம் அல்ல, உலகளாவிய ரீதியில் இருக்கும் மில்லியன் கணக்கான மக்களுக்கும் இது ஓர் உத்வேகத்தை தரும்" என்று ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

5. பிரதமர் மற்றும் அமைச்சர்களின் பதவிப் பிரமாண நிகழ்வில் இந்தியாவின் அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர பிராந்தியத்தை சேர்ந்த நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டிருந்த முக்கியத்துவம் வாய்ந்த இத்தருணமானது, இப்பிராந்தியத்துடன் இந்தியா கொண்டிருக்கும் ஆளவேரூன்றிய நட்புறவு மற்றும் ஒத்துழைப்பின் பிணைப்புகளை எடுத்தியம்புகின்றது.

***********

**கொழும்பு**
**11 ஜூன் 2024**